V10T

விருதுநகர் மாவட்டம்
காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2024

வகுப்பு 10

தமிழ்

காலம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 100

பகுதி - I

15×1=15

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது .............
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

2) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு .............
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) தாய்லாந்து ஈ) இலங்கை

3) குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

4) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

5) இது செய்வாயா? என்று வினவியபோது, "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது .............சுவிடையாகும்.
அ) ஏவல் விடை ஆ) சுட்டு விடை இ) மறை விடை ஈ) நேர் விடை

6) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் .............
இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .............
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

7) காசிக்காண்டம் என்பது .............
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

8) **நீதிநெறி விளக்கம்** என்னும் நூலை இயற்றியவர் .............
அ) கம்பர் ஆ) குமரகுருபரர் இ) செயங்கொண்டார் ஈ) கண்ணதாசன்

9) 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி .............
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

10) உலகக் காற்று நாள் .............
அ) ஜூன் 14 ஆ) ஜூன் 15 இ) ஜூன் 16 ஈ) ஜூன் 17

11) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே .............
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக:**

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12) வேழம் என்ற சொல்லின் பொருள் ............
அ) யானை ஆ) கடல் இ) மரம் ஈ) குரங்கு

13) இப்பாடலில் இடம்பெறும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
அ) நெடுந்திரை - நெடும்படை ஆ) நடுங்கிடும் - அடர்ந்தவர்
இ) தோழமை - ஏழமை ஈ) போவாரோ - ஏசாரோ

14) நெடுந்திரை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............
அ) நெடு+திரை ஆ) நெடுங்கு+இறை
இ) நெடுமை+திரை ஈ) நெடிது+இரை

15) இப்பாடல் இடம் பெறும் நூல் ............
அ) நீதி வெண்பா ஆ) திருவிளையாடற்புராணம்
இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 4×2=8
**(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16) **விடைக்கேற்ற வினா அமைக்க:**
அ) கிரேக்க அறிஞர் "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.
ஆ) இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவு கருத்துகள் கலைஞரை ஈர்த்தன.

17) இரட்டுறமொழிதல் என்றால் என்ன?

18) செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

19) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

20) வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்ட சில காப்பியங்களைக் கூறுக.

21) 'கண்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 5×2=10

22) **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க:**
அ) இன்சொல் ஆ) முத்துப்பல்

23) **கிளர்ந்த - உறுப்பிலக்கணம் தருக.**

24) "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுகாண் வற்றாகும் கீழ்" - **இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.**

25) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
அ) வளி - வாளி
ஆ) இயற்கை - செயற்கை

26) பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்?
ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

27) கொண்டுகூட்டுப் பொருள்கள் என்றால் என்ன?

28) **கலைச்சொல் தருக:**
அ) Screenplay ஆ) Discussion

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:** 2×3=6

29) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

திராவிட இயக்கத் தலைவர்கள் பெரும்பாலோர் இதழாசிரியர்களாக இருந்திருக்கின்றனர். அவ்வகையில் இளம் வயதிலேயே கலைஞர் 'மாணவ நேசன்' என்னும் கையெழுத்து ஏட்டை நடத்தினார். அப்பயிற்சி தந்த ஊக்கத்தால், அண்ணாவின் 'திராவிட நாடு' இதழில் தம் முதல் கட்டுரையை எழுதினார். அப்போது அவருக்கு வயது பதினெட்டு. அதே ஆண்டில், 'முரசொலி வெளியீட்டுக்கழகம்' என்ற பெயரில் நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார். 'முரசொலி' ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி, வார இதழாக்கி, நாளேடாக்கினார். இன்றளவும் அது தொடர்ந்து நடத்தப்படுகிறது. 'சேரன்' என்ற புனைபெயரில் அவர் பல கட்டுரைகளை எழுதினார்.

அ) கலைஞர் இளம் வயதில் நடத்திய கையெழுத்து ஏட்டின் பெயர் என்ன?

ஆ) 'திராவிட நாடு' என்ற இதழை நடத்தியவர் யார்?

இ) 'சேரன்' என்ற புனைபெயரில் பல கட்டுரைகளை எழுதியவர் யார்?

## பிரிவு - 2

***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:*** **2×3=6**

**(34 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

34) **அடிபிறழாமல் எழுதுக:**

அ) **வாளால் ..........** எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

**(அல்லது)**

ஆ) **புண்ணியப் புலவீர் .....** எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணம் பாடல்.

## பிரிவு - 3

***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:*** **2×3=6**

35) வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

36) ''குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை''

**- இக்குறளில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக/**

37) ''கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!

**- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

***அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:*** **5×5=25**

38) அ) **பாநயம் பாராட்டுக:**

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே தென்னாடு
விளங்குறத் திகழுந்தென் மொழியே வானினும்
ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே உணர்வினுக்
குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே வானினும்
ஓங்கிய வண்டமிழ் மொழியே மாந்தருக் கிருகணா
வயங்குநன் மொழியே தானனி சிறப்புறுந் தனித்தமிழ்
மொழியே தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே.

**- கா. நமச்சிவாயர்**

**(அல்லது)**

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39) அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



41) **கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவம் நிரப்புக:**
விருதுநகர் மாவட்டம் ஆமத்தூர், இலக்க எண் 10/3 இல் வசிக்கும் கனகவேல் மகன் விக்ரம் பத்தாம் வகுப்பு படித்து முடித்துள்ளான். பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ள நூலக உறுப்பினராக விரும்புகிறான். தேர்வர் தம்மை விக்ரமாகக் கருதி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42) அ) **மொழிபெயர்க்க:**

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movies songs. He has written Kuralovium for Thirukural, Tholkaapiya poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuralovium, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133 - foot - high statue of Thiruvalluvar in honour of the scholar.

**(அல்லது)**

ஆ) இன்சொல் வழியின் நன்மைகளையும், தீயசொல் வழியின் தீமைகளையும் பட்டியலிடுக.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க:** **3×8=24**

43) அ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44) அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45) அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

----------